# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 04செவ்வாய்க்கிழமை(18-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்148


பொது சன நூலகம் 18 MAY 1999 யாழ்ப்பாணம்

# கட்சி தலைவர் பதவியை துறந்தார் சோனியா!

புதுடில்லி, மே 18

இந்தியத் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியைத் திருமதி சோனியாகாந்தி நேற்று திடீரென இராஜினாமாச் செய்தார்.

நேற்றிரவு கட்சியின் செயற்குழுக் கூட்டம் ஆரம்பமானவுடனேயே அவர் தமது இராஜினாமா அறிவிப்பை விடுத்தார்.

15 ஆம் திகதியிடப்பட்ட தமது இராஜினாமாக் கடிதத்தைக் கூட்டத்தில் அவர் வாசித்தார்.

பதவி ஆசை கருதியோ அன்றி வேறு நோக்கங்களுக்காகவோ இப்பதவியை தான் ஏற்கவில்லை என்றும்—

நெருக்கடியான ஒரு கட்டத்தில் கட்சியைக் காப்பாற்றுவதற்காகவே தலைமைப் பொறுப்பை ஏற்கத்தான் முன்வந்ததாகவும்—

சோனியா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சோனியாவின் இந்த திடீர் முடிவு மூத்த காங்கிரஸ் பிரமுகர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

சோனியாவின் பதவி விலகலை அடுத்து காங்கிரஸ் செயற்குழு மூத்த தலைவர் பிரணாப் முஹர்ஜி தலைமையில் தொடர்ந்து கூடி நிலைமையை ஆராய்ந்தது.

கட்சித் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்குமாறு சோனியா காந்தியிடம் ஏகமனதாகக் கோருவது என்றும்—

நாட்டின் பிரதமர் பதவி தொடர்பாக அரசமைப்பில்திருத்தம்கொண்டுவரப்படவேண்டும் என்ற கட்சியின் மூத்த தலைவர்களான சரத்பவார், முன்னாள் சபாநாயகர்சங்மா, முன்னாள் அமைச்சர் தாரிக் அன்வர் ஆகியோர் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொள்வதில்லை என்றும்—

செயற்குழு பின்னர் முடிவுசெய்ததாக நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி, உபஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இந்தியாவில் பிறந்த இந்தியர் ஒருவரே இருக்க வழிவகுக்கும் வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரியுள்ள மூன்று மூத்த காங்கிரஸ் பிரமுகர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.



உட்கட்சி நெருக்கடி மற்றும் சோனியாவின் ராஜினாமா என்பன எதிர்வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைப் பெரிதும் பாதிக்கும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

# புளொட், ரெலோ முகாம்களில் ஆயுத களைவு நடவடிக்கை!

## நேற்று வவுனியாவில்

வவுனியா, மே 18

வவுனியாவில் புளொட் மற்றும் ரெலோ அமைப்பினர் இடையே முறுகல் நிலை அதிகரித்து வருவதை அடுத்து அந்த இரு அமைப்பினரிடமும் இருந்தும் ஆயுதங்களைகளையும் நடவடிக்கையைப் படையினர் நேற்று மாலை முதல் ஆரம்பித்துள்ளனர்.

ரெலோ அமைப்பினரிடம் இருந்து 12 துப்பாக்கிகளும், புளொட் அமைப்பினரிடம் இருந்து 13 துப்பாக்கிகளும் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் வைத்து ரெலோ உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக வவுனியாவில் புளொட் அமைப்புக்கும் ரெலோ அமைப்புக்கும் இடையே ஆரம்பமான மோதல் நிலை தொடர்வதை அடுத்தே பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஆயுதக் களைவு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரு அமைப்புக்களி

[10 ஆம் பக்கம் பார்க்க]

### பாதுகாப்புக் கருதி

## வவுனியா வாசிகள் பலர் கொழும்பு செல்கின்றனர்

வவுனியா, மே 18

வவுனியாவில் புளொட் அமைப்புக்கும் ரெலோ அமைப்புக்கும் இடையே பெரும் மோதல் வெடிக்கலாம் என அஞ்சி வவுனியாவைச் சேர்ந்த பலர் கொழும்புக்கு இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதலாக இள வயதினரும் இந்தத் தமிழ் அமைப்புக்களில் இருந்து ஏற்கனவே விலகியிருந்தவர்களுமே பாதுகாப்புக் கருதிக் கொழும்புக்குச் செல்கின்றனர்.

புளொட் அமைப்பில் இருந்து விலகிய இருவர் வவுனியாவில் கொல்லப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-6)

### பம்பலப்பிட்டி சூட்டு சம்பவம்

## 2 புளொட் உறுப்பினர்கள் கிருலப்பனையில் கைது!

கொழும்பு, மே 18

கொழும்பு பம்பலப்பிட்டியில் கடந்த சனிக்கிழமை மாலை ரெலோ அமைப்பின் வவுனியாத் தளபதி மற்றும் நிதிப் பொறுப்பாளர், ஆதரவாளர் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட 'வான்' கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில்

## கைதான எட்டுப் பேரை படையினர் காண்பித்தனர்

### கைது குறித்து தளபதி மாரம்பே விளக்கம்

யாழ்ப்பாணம், மே 18

கொக்குவில் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் கடந்த சில தினங்களில் சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள், மாணவர்கள் உட்பட எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்று உரெழுவில் உள்ள முகாம் ஒன்றில் வைத்து 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மாரம்பே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் கைதானவர்களின் பெற்றோர்கள், பத்திரிகையாளர்களுக்குக் காட்டினார்.

இவர்களின் கைது தொடர்பாக மேஜர் ஜெனரல் மாரம்பே அங்கு விளக்கமளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் அவர் கொடுத்த தகவல்களின் பேரில் ஏனைய ஏழு பேரும் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுவது, தடை செய்யப்பட்ட பொருள்களை வன்னிக்கு அனுப்புதல், இராணு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி இளைஞரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், மே 18

கைதடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமற்போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த வசந்தநாதன் ஜெகநாதன் (வயது 21)என்பவரே காணாமற்போனவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் ரிக்கெற் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 18

'லங்கா முடித்த' கப்பலின் அடுத்த சேவைக்கான ரிக்கெற் விநியோகம் நாளை புதன்கிழமையும், மறுநாள் வியாழக்கிழமையும் பிற்பகல் 2 மணி முதல் யாழ் சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெறும் என்று சிவில் நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளார். ஐ

## மின் மாற்றிகளின் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு மே 18

கொழும்பு ஐந்து லாம்புச் சந்தி, மீன் சந்தை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு மின்மாற்றிகளின் அருகே இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புக்களையும் அடுத்து கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ள மின் மாற்றிகளின் பாதுகாப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இடம் ஒதுக்கப்படாததால்

## கப்பலுக்குக் காத்திருந்த பயணிகள் ஆர்ப்பாட்டம்

திருமலை, மே 18

திருமலையில் இருந்து நாளை புறப்படவுள்ள 'லங்கா முடித்த' கப்பலில் தமக்கு இடம் ஒதுக்கப்படாததை அடுத்து கப்பலுக்குப் பதிவு செய்துவிட்டுக் காத்திருந்த நூற்றுக்கணக்கான தனிப்பட்ட பயணிகள் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

தமக்கு கப்பல் வசதிசெய்து தருமாறு கோரி அவர்கள் இன்று ஆளுநரைச் சந்தித்து கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

நாளை புறப்படவுள்ள 'லங்கா முடித்த' கப்பலில் பிரயாணம் மேற்கொள்ள முடியுமென இவர்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / லங்கா சித்த ஆயுர்வேத

மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான

## கலந்துரையாடல்

இன்று (18 - 05 - 99) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சகல மாணவர்களையும், அகில இலங்கை D. A. M பட்டதாரிகள் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- அவசர முடிவுகள் எடுக்க வேண்டி இருப்பதால் தவறாது சமுகம் தரவும்.

— செயலாளர்,
அகில இலங்கை D.A.M பட்டதாரிகள் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(65839)

# பேர்ள் றிச் தொலைத்தொடர்பு

## மானிப்பாய்

## PEARL RICH COMMUNICATION
MANIPAY

உள்வரும் அழைப்புகளைக் கடந்த ஐந்து நாட்களாக இலவசமாக வழங்கி உங்களை மகிழ்வித்தவர்களின் மற்றுமோர் சலுகை

01. உள்வரும் அழைப்புகளுக்கு நிமிடத்துக்கு ரூபா 4/- மட்டுமே!
02. மிகக்குறைந்த கட்டணத்தில் உள்ளூர், வெளியூர் அழைப்புகள்.

அமைதியான சூழ்நிலையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பெட்டிகளில் (BOOTHS) உங்கள் அன்புக்குரியவர்களுடன் அட்டகாசமாய் உரையாடி மகிழுங்கள்!

T. P. NO. உள்ளூர் 021—2882
வெளியூர் 0094—21—2882

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

[65836]

# அறிவித்தல்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[மட்டுப்படுத்தப்பட்டது]

நிதியாண்டு 30-6-1996—1997-6-30
[30-6-97—98-6-30] காலத்துக்கான கணக்காய்வு

எமது சங்கத்தின் மேற்படி காலத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதனால் 1996-5-30—1998-6-30 ஆம் திகதி வரை சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் தொடர்புடையவர்கள் சங்கப் பணியாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கணக்கு விவரங்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்றில் இருந்து (14) பதின்னான்கு நாள்களுக்குள் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.


தவறும் பட்சத்தில் சங்கப்புத்தகங்களின்படி சரியென ஏற்று கணக்காய்வு முடிவுறுத்தப்படும்.

தொடர்புகொள்ளும் இடம்:-
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
வேலணை.

தலைவர்
வேலணை பல, நோ. கூ. ச.
வேலணை.

(65837)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 18 |
| — | — |
| 03 | 04 |
| — | — |
| 1918 | 1999 |

சிங்கப்பூரில் காலமாகிய
அமரர்

## சதாசிவம் இராசையா
(உரும்பிராய் கிழக்கு)

எங்கள் அருமை அப்பாவே!
எமது அன்பு மாமாவே!
எங்கள் பாசமிகு அப்பப்பாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

— மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி புஸ்பவதி வாமதேவன்
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(கி/7577)

# தாச்சி சுற்றுப்போட்டி

உடுவில் கிழக்கு அறிஞர் விளையாட்டுக்கழக யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தும் வருடாந்த தாச்சி சுற்றுப் போட்டி கடந்த 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இறுதிப்போட்டி 29 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக மேற்படி கழகத் தலைவர் ப. அருந்தவகுமார் தெரிவித்தார்.

(க-135)

# ஸ்ரீ செல்வா

சினிமா
ஸ்ரான்லி றோட்
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரப்படி)
கார்த்திக், தேவயானி
நடிக்கும்
நிலவே முகம்காட்டு
சிறந்த குடும்பச்சித்திரம்
(நேரடி C.D)
(65844)

# லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
சிவாஜி, உஷாநந்தினி, நாகேஸ்
நடிக்கும்
கௌரவம்
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(65664)

# ராஜா

யாழ்ப்பாணம்.
(இன்று மட்டும்)
கார்த்திக் -ரம்பா
மற்றும் பலர் நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
10-30, 2-30
19 ஆம் திகதிமுதல்
செந்தூரபாண்டி
(சி/7549)

# நாகம்ஸ்

சுன்னாகம்.
பிரபு - குஷ்பு
ராதாரவி - கவுண்டமணி
நடித்த
சின்னத்தம்பி
(இனிய பாடல்கள் நிறைந்தது)
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்) (65832)

# விஞ்ஞான ஆசிரியர்களுக்கு வானிலை பற்றி பயிற்சி

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 50 விஞ்ஞான ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி வானிலை தொடர்பான பயிற்சி ஒன்று கொழும்பில் நடைபெற விருக்கின்றது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 8 ஆம், 9 ஆம் வகுப்பு மாணவர்களின் நன்மை கருதி இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடாகியுள்ளது.

கொழும்பில் உள்ள வானிலை அவதான நிலையத்தில் இடம் பெறும் இந்தப் பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் ஆசிரியர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

(இ-3)

# சுடருக்கு வாழ்த்துக்கள்!

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர்

## திரு. இ. மகேந்திரன் (சுடர்)
அவர்கள்

18 — 05 — 1999 இன்று தனது அறுபதாவது வயதைப் பூர்த்திசெய்து மணிவிழாக் காணுவதையிட்டு அவரும் அவரது குடும்பத்தினரும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமிகளின் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ எமது நல்வாழ்த்துக்கள்!

இ. சிவலிங்கம் குடும்பத்தினர்,
இரத்தினம் அவெனியூ,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

த. சகாதேவன் குடும்பத்தினர்,
ஜெயமங்களம்
ஸ்ரேசன் றோட்,
கொக்குவில்.

(சி/7579)

# பிறந்தநாள் வாழ்த்து

## உயர்திரு. இ. மகேந்திரன்

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் புகழ் பூத்த முன்னாள் அதிபரும் சிறந்த கல்வி நிர்வாகியும் மனித நேயம்மிக்க சமூக சேவையாளருமாகிய

உயர்திரு. இ. மகேந்திரன் அவர்கள்
தனது அறுபதாவது அகவையினை

அடையும் இந் நாளில் அவர்தம் பணிகளைப்பாராட்டுவதோடு குடும்பத்தினரோடு மகிழ்ந்து வாழ்ந்து மேலும் சேவைபுரிய இறைவனைவேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

- பலாலி ஆசிரிய கலாசாலை நண்பர்கள்

[65830]

# பாராட்டுகின்றோம்

சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர்

## திரு. ட. திலகநாயகம்போல்
அவர்களை

## கலாபூஷணம்

விருது பெற்றமைக்காக வாழ்த்துகின்றோம். அவரது பணி மேன்மேலும் சிறக்கவும், நீண்ட ஆயுளைப் பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசை ஆசிரியர்கள்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

(65840)

உ

வேலணை மேற்கு பெரியபுலம்

# மகா கணபதிப்பிள்ளையார் கோயில்
(முடிப்பிள்ளையார்)

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

ஐங்கரன் அடியார்களே!

மேற்படி கோயில் வருடாந்த மஹோற்சவம் 19 - 05 - 1999 இல் ஆரம்பமாகி 29 - 05 - 1999 வரை 11 நாள்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொடியேற்றம்: | — | 19-05-99 | புதன் | பகல் | 11.30 | மணி. |
| வேட்டைத்திருவிழா: | — | 26-05-99 | புதன் | பிற்பகல் | 2.00 | மணி. |
| சப்பறத் திருவிழா: | — | 27-05-99 | வியாழன் | மாலை | 5.30 | மணி. |
| தேர்த்திருவிழா: | — | 28-05-99 | வெள்ளி | பகல் | 11.00 | மணி. |
| தீர்த்தத்திருவிழா: | — | 29-05-99 | சனி | காலை | 10.30 | மணி. |

மஹோற்சவ காலங்களில் அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் அருள் பெற்று பெருவாழ்வு வாழ பெரியபுலத்தானின் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

- பரிபாலன சபையினர்.

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்,
வேலணை மேற்கு, வேலணை - 8.

(65833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத்பவாரையும் மற்றும் இருவரையும் காங்கிரஸிலிருந்து நீக்கக்கோரிக்கை!

## ஜெயலலிதாவுடனான நேற்றைய சந்திப்பும் ரத்து

புதுடில்லி, மே 18

சோனியா காந்திக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ள காங்கிரஸின் மூத்த தலைவர்கள் மூவரையும் கட்சியில் இருந்து வெளியேற்றுமாறு காங்கிரஸில் உள்ள சோனியா ஆதரவாளர்கள் பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தியும் நேற்று மாநில காங்கிரஸ் கூட்டத்தைக் கூட்டி சோனியா காந்திக்கு ஆதரவு தெரிவித்தார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் சரத்பவார், முன்னாள் சபாநாயகர் சங்மா, முன்னாள் அமைச்சர் தாரிக் அன்வர் ஆகிய மூவரும் சோனியாவின் தலைமைக்குச் சவால் விட்டிருப்பது தெரிந்ததே.

நேற்று புதுடில்லியில் நடைபெற இருந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இந்த மூவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சரத்பவாரும் சங்மாவும் வெளிநாட்டில் உள்ளனர். சரத்பவார் இன்றும் சங்மா நாளையும் டில்லி திரும்புகின்றனர்.

தற்பொழுது புதுடில்லியில் தங்கி உள்ள அன்வர் தாம் செயற்குழுக் கூட்டத்தில் பங்குபற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதே சமயம் காங்கிரஸின் மூத்த தலைவர்கள் தெரிவித்த கருத்து தேசிய அளவில் விவாதத்துக்கு உரியது என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிப் பதவி, உப ஜனாதிபதி பதவி, பிரதமர், பிரதம நீதியரசர் பதவியில் உள்ளவர்கள் இந்தியாவில் பிறந்த இந்தியர்களாக இருக்கவேண்டும் என்று இந்த மூன்று மூத்த தலைவர்களும் தெரிவித்தது தெரிந்ததே

இந்தக் கருத்து கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-க)

## இலங்கையர் உட்பட 11 பேர் லித்துவேனியாவில் கைது

லண்டன், மே 18

லித்துவேனியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த இரு இலங்கையர்கள் உட்பட 11 பேர் லித்துவேனிய காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய 9 பேரும் பாகிஸ்தானியர் ஆவர்.

கிராம வாசிகளிடம் இவர்கள் உணவு கேட்டனர் என்றும் —

கிராமவாசிகள் கொடுத்த தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் — கூறப்பட்டது

கைதானவர்கள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இவர்களது நாடுகளுக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## ராஜீவ் வழக்கு; ஜூலையில் மனு

புதுடில்லி, மே 18

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றுள்ள நால்வருக்கும் ஆயுள் சிறைத்தண்டனை பெற்றுள்ள மூவருக்கும் கருணை காட்டுமாறுகோரும் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் ஜூலை மாதத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளன.

உச்ச நீதிமன்றத்துக்கு தற்சமயம் விடுமுறை காலமாதலால் மனுத்தாக்கல் செய்ய முடியவில்லை என்றும்—

உச்ச நீதிமன்றம் ஜூலையில் மீண்டும் பணியைத் தொடங்கும்போது மனுத் தாக்கல் செய்யப்படும் என்றும்— அவர்களின் சட்டத்தரணி நடராஜன் தெரிவித்தார். (இ-3)

## விபத்திலிருந்து கிளின்ரன் தப்பினார்!

வாஷிங்ரன், மே 18

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பயணம் செய்த விமானம் மயிரிழையில் விபத்தில் இருந்து தப்பியது

கிளின்ரன் பயணம் செய்த விமானம் லொஸ் ஏன்ஜெல்ஸில் தரைஇறங்க முற்பட்ட சமயம் அந்த விமான நிலையத்தில் இருந்து விமானம் ஒன்று மேலெழுந்தது.

நேருக்கு நேர் இந்த இரு விமானங்களும் மோதும் நிலை உருவானது என்றும் —

கிளின்ரன் பயணம் செய்த விமானத்தின் விமானி சாதுரியமாக மின்னல் வேகத்தில் செயற்பட்டதால் விபத்துத் தவிர்க்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# பாரதீய ஜனதா தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி

### பொதுச் சின்னத்தில் போட்டி

புதுடில்லி, மே 18

எதிர்வரும் தேர்தலில் போட்டியிட பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் தனித்தனியாகக் கட்சிகள் போட்டியிடாமல் பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள கட்சிகள் இணைந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற அமைப்பின் கீழ் போட்டியிடவிருக்கின்றன.

பாரதீய ஜனதாக் கட்சியுடன் இணைந்துள்ள கட்சிகள் பொதுச் சின்னத்தில் போட்டியிடும்.

இந்தக் கூட்டணியின் தலைவராக எல். கே. அத்வானி இருப்பார். இணைப்பாளராக ஜோர்ச் பெர்னாண்டோ கடமையாற்றுவார்.

தி. மு க. சார்பில் முரசொலி மாறனும், பாரதீய ஜனதா சார்பில் ஜஸ்வந் சிங்கும் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிப்பர்.

பொதுக் கொள்கை ஒன்றின் கீழ் போட்டியிடும் இந்தக் கூட்டணியில் மறுமலர்ச்சி தி மு.க. பாட்டாளி மக்கள் கட்சி, தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஆகியனவும் இடம் பெறுகின்றன.

அதேநேரம்— இந்தக் கூட்டணி தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று முன்தினம் ஆந்திராவில் வீரமந்திர் பகுதியில் ஆரம்பித்துள்ளது.

பிரதமர் வாஜ்பாய் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர்.

ஒரு லட்சத்துக்கு மேல் மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகக் கூறப்பட்டது.

(இ-3)

## நத்தனியாகுவுக்கு வெற்றிவாய்ப்புக் குறைவு!

உலக அரங்கில்

நேற்று ஆரம்பமான இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி வேட்பாளரான எகுட்வராக் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய பிரதமர் நத்தனியாகுவுக்கும், வராக்குக்கும் இடையில் நேரடிப் போட்டி உள்ளதாகவும் — அண்மையில் எடுக்கப்பட்ட வாக்குக் கணிப்பில் 52 சதவீத ஆதரவை எகுட்வராக் பெற்றிருந்தார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட மூன்று வேட்பாளர்கள திடீரென பதவி விலகியதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது

நத்தனியாகுவின் பொருளாதாரச் செயற்பாடுகள் தோல்வியடைந்ததால் அவருக்கு வெற்றி வாய்ப்புக் குறைந்துள்ளது என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ-3)

# தேர்தல் நடத்தக் கோரி பங்களாதேஷில் போராட்டம்

### அரசின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

டாக்கா, மே 18

பங்களாதேஷ் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் உள்ளதால் உடன் அரசாங்கத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் பெரும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

கடந்த மூன்று நாள்களாக இடம்பெறும் இந்தப்போராட்டம் காரணமாக அரசின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் கஷ்ட நிலையில் வாழ்கின்றனர் என்றும்—

இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று அரசு விலகவேண்டும். என்றும் — எதிர்க்கட்சிகள் கோரியுள்ளது

"எந்தக் காரணம் கொண்டும் தேர்தல் நடத்தப்பட மாட்டாது, குறிப்பிட்ட காலத்திலேயே தேர்தல் நடத்தப்படும் என ஆளுந்தரப்பு தெரிவித்துள்ளது.

(இ-3)

## குவைத்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்கும்

குவைத் மே 18

குவைத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதுடன் தேர்தலில் போட்டியிடவும் அரசாங்கம் அனுமதி அளிக்கவிருக்கின்றது.

பெண்களுக்கும் சம வாய்ப்பு வழங்கும் நோக்குடன் குவைத் அரசாங்கம் இது தொடர்பான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றது.

2003 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெறும் தேர்தலில் பெண்கள் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவிருக்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் பெண்கள் வாக்களிக்கவோ தேர்தலில் போட்டியிடவோ அனுமதி வழங்கப்படுவதில்லை.

இந்நிலையில் குவைத் இந்த உரிமையைப் பெண்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

(இ 3)

## 65 பேர் உடல் கருகி பாகிஸ்தானில் மரணம்!

லாகூர், மே 18

லாகூருக்குத் தென்மேற்கே இருநூறு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் எரிபொருள் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 65 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்; மேலும் நூறுபேர் காயத்துடன் உயிருக்காகப் போராடுகின்றனர்.

வீதியில் சென்று கொண்டிருந்த எரிபொருள் நிரம்பிய அந்த வாகனம் வீதியில் மற்றொரு வாகனத்தைக் கடந்த போது விபத்துக்குள்ளாகிக் கவிழ்ந்தது;

அந்த வாகனத்தில் இருந்து பரவிய எரிபொருளை நூற்றுக்கணக்கான மக்கள் முண்டியடித்துச் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் திடீர் எனத் தீ பரவி மக்களை மூடிக்கொண்டது.

தீ பரவியதால் பல கடைகள், வாகனங்கள் சேதத்துக்குள்ளாகின. (இ-3)

# காஷ்மீரில் ஊடுருவற்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடர்கிறது

### மோதலில் இதுவரை 23 பேர் பலி

ஜம்மு காஷ்மீரில் ஊடுருவியுள்ளவர்களுக்கு எதிராக இந்தியப்படை பெரிய அளவில் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சுமார் ஐந்நூறு பேர் ஜம்மு காஷ்மீரில உள்ள காட்டில் பகுதிக்கு ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து கடந்த எட்டு நாள்களாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று வரை இந்த நடவடிக்கையில் 23 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் பாகிஸ்தானியர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஊடுருவியவர்கள் பாகிஸ்தானியரும், ஆப்கான் அரசதரப்புப் படையினரும் எனத் தெரியவந்துள்ளது என்று இந்தியத்தரப்பு தெரிவித்தது.

மலை உச்சி மற்றும் காட்டுப் பகுதியில் பதுங்கியுள்ளவர்களைக் கண்டுபிடிக்க இந்தியப்படையினர் தேடுதலைத் தீவிரமாக்கியுள்ளனர்.

எல்லைப் பகுதியை நோக்கி படையினர் தொடர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கையால் பொதுமக்கள் பாதிக்கப்படாது இருப்பதற்காக காட்டில பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது என்றும் —

அடுத்த மூன்று நாள்களுக்குள் ஊடுருவியவர்கள் அனைவரும் விரட்டி அடிக்கப்பட்டு விடுவார்கள் என்றும் — பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மணவறைக்கு உரிய கண்ணாடி யாழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா. சதாசிவம், நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரி. (65805)

சைவத் திருமுறைகள், திருக்குறள் நற்சிந்தனை, யோகாப்பியாசம், தியானம், ஜோதிடம் பல தமிழ் நூல்கள் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம். நேரம் மாலை 2-00—6-00 வரை. [65815]

நல்லின அல்ஷேசன் ஆண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K மகாலிங்கம் சோதி வேம்படி வீதி, மானிப்பாய். [65812]

சிறிது திருத்தம் செய்ய வேண்டிய பிலிப்ஸ் (Philips) ஐஸ் பெட்டி (Refrigerator) குறைந்தவிலைக்கு உடன் விற்பனைக்கு. தொடர்பு: E. ரமேஸ் மே/பா றேடியோ மனுவல், 22, நல்லூர் அரசடி வீதி, யாழ்ப்பாணம். [65808]

### யாழ்ப்பாணம்

உதயனிலும் தினக்குரலிலும் பிரசுரமான அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூலின் விமர்சனம் வாசித்தீர்களா? 2. நாடகம் எழுதுவது எப்படி? 3. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் ரூ. 50 [65820]

### தவறிவிட்டது

மயூரபவனம் உடுவிலைச் சேர்ந்த ப. ஆனந்தமகேஸ்வரன் என்பவரது தேசிய அ. அட்டை இல. 410641755X விசேட அ. அட்டை இரண்டும் 13. 5. 99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது மானிப்பாய் இந்துக்கல்லூரி காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (65819)

கடைத்திறப்புகள் கோர்வையுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும், மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, கண்டி வீதி, கணேசா விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/7563)

### மின் தடை

சங்கானை, மே 18

சங்கானை பிரதேசசபைக்குட்பட்ட அராலி வீதி, குளத்தடி வீதிப்பகுதிகளுக்கான மின்சார விநியோகம் அடிக்கடி இரவு நேரத்தில் தடைப்படுகிறது. (இ-29)

### கந்தரநுபூதி பாடல் பிரசுரம்

சுழிபுரம், மே 18

கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல் கருத்துக்கள் முழுவதையும் பத்துப்பகுதிகளாக வெளியிடுவதற்கு வழக்கம்பறை பஜனைச் சபை ஏற்பாடுகள் செய்துள்ளது.

முதலாவது வெளியீடு கடந்த 15 ஆம் திகதி (கார்த்திகை நாளில்) வெளியிடப்பட்டது. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கந்தரநுபூதி விரிவுரைக் கருத்தை முழுதும் கொண்டு, அருணகிரிப் பெருமானே உமக்கு முருகன் மொழிந்தது எத்தன்மையது! சிறிது கூறலாமா? என்ற கேள்விக்குப் பதில் கூறுவதாக இவ் வெளியீடு அமைந்துள்ளது. இவ் வெளியீடு இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது.

# காவலரண்களுக்கு அருகில் வீடுகள் உள்ளனவே; வலிகாமம் வடக்கில் மட்டும் அனுமதி மறுப்பதேன்?

## கலந்துரையாடலில் சிவமகாராசா

வலி. வடக்கு, மே 18

யாழ். மாவட்டத்தில் ஏனைய பகுதிகளில் இராணுவக் காவலரண்கள் மற்றும் முகாம்களுக்குச் சமீபமாக குடியிருக்க மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் வலி. வடக்குப் பகுதி மக்களை மட்டும் குடியேற அனுமதிக்காது உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி தடுத்து வருவது அரசின் ஒரு திட்டமிட்ட செயலாகும்.

மேற்கண்டவாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி. சிவமகாராசா தெரிவித்தார்.

வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான கலந்துரையாடல் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்துக்கு அருகில் உள்ள கல்வி நிறுவனத்தில் தலைவர் சு. பரமநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தொடர்ந்து பேசிய சங்கத் தலைவர் சி. சிவமகாராசா கூறியதாவது;-

வலி. வடக்குப்பகுதி மக்களைப் பொறுத்த வரையில் இன்றைய நிலை மிகவும் மனம் வருந்தத்தக்கதாகும்.

தொழில்களை இழந்தும், இருப்பிடங்களை விட்டும் வெளியேறிய நிலையில் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டே நடைப்பிணங்களாக அவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

பலாலிக்கு அண்மையாகக் கூட மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறாயின் எமது பகுதியின் பிரபல்யம் மிக்கபாடசாலைகளான யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றை சொந்த இடங்களில் இயங்க ஏன் அனுமதிக்கக் கூடாது?

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தை ஏன் அதனது சொந்தக் கட்டடத்தில் இயங்க அனுமதிக்கக் கூடாது? — என்றும் கேட்டார்.

இன்று வலி.வடக்குப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிலையைத் தொடர்ந்து இரண்டாம் நிலையிலேயே காணப்படுகின்றனர். 5 ஆயிரம் ரூபா மீளக் கொடுப்பனவில் கூட இரண்டாம் தரநிலையிலேயே கொடுப்பனவுகளும் இடம் பெறுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த சு. பரமநாதன் தனது தலைமை உரையில் கூறியதாவது:—

வடமராட்சி, தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த நாம் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டினுள் வரும்போது எமது சொந்த வீடு வாசல்களில் குடியேறப் போகின்றோம் என்ற மகிழ்ச்சியுடனேயே வந்தோம்.

உள் வந்தபிறகு எமது வலி. வடக்குப் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி அரசு தடுத்து நிறுத்திய செயலானது எமக்குப் பெரும் பேரிடியாக அமைந்தது.

1986 ஆம் ஆண்டு முதல் இன்று வரையும் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து இன்று வரையும் இருக்க இடமின்றியும், நிம்மதி இன்றியும் எமது சொந்த மண்ணிலேயே அகதிகளாகி அலைந்து கொண்டிருக்கின்றோம்.

இப்பகுதியில் வாழும் மக்களில் 60 சத வீதமான மக்கள் நிலத்தை நம்பி தொழில் செய்யும் விவசாயிகளாகவும், 30 வீதமானவர்கள் கடலை நம்பி தொழில் செய்யும் மீனவர்களாகவும் உள்ளனர்.

பாதுகாப்பு வலயம், கடலில் தொழில் செய்ய முடியாமை என்ற காரணங்களினால் எமது மக்கள் படும் துன்பங்களை ஏனையவர்கள் நன்கு சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-86)

## சீட்டிழுப்பு முடிவுகள்

17 - 05 - 1999 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுக் குலுக்கல் முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம் 1000
2 ஆம் பரிசு இலக்கம் 0099
3 ஆம் பரிசு இலக்கம் 0313

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 0855 | 1360 | 1233 |
| 0754 | 0260 | 0198 |
| 0405 | 0054 | 1101 |
| | 1172 | |

குறிப்பு: பரிசுக்குரியவர்கள் ''பொறுப்பதிகாரி உப-பணிமனை, சாவகச்சேரி பிரதேசசபை, நாவற்குழி.

அவர்களிடம் அடிச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து 14 நாள்களில் பரிசுகளைப் பெறவும்.

நன்றி.

செ. ஆனந்தரஞ்சன்
தலைவர்

அலுவலக நாள்களில் (திங்கள், புதன், வெள்ளி) பெற்றுக் கொள்ளவும். (65825)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 08 — 09 — 1934



மறைவு 18 — 04 — 1999

திருமதி
## ஆறுமுகம் சின்னாட்சி

அன்று அன்புத் தந்தை.
நேற்று அன்புச் சகோதரி — மகள்,
இன்று நீங்கள் அம்மா
காலங்கள் எழுதும் கண்ணீர்க் கதைகளில்
நிஜங்களைத் தொலைத்துவிட்ட நாங்கள்
வெறும் நினைவுகளோடும், துயரங்களோடும்...?

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்

வட்டக்குளத்தடி,
கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம். (சி/ 7569)

## நன்றியுடன் பாராட்டுகின்றேன்

தவறவிடப்பட்ட எனது பெறுமதிமிக்க தங்கமோதிரத்தை நேர்மை உணர்வுடன் நிர்வாகியிடம் ஒப்படைத்த

செல்வன் வன்னியசிங்கம் றதீசன்
(கரவெட்டி ரலன்ற் கல்வி நிலைய மாணவன்)

அவர்களைப் பாராட்டுவதுடன், நேர்மை ஒழுக்கம் என்பவற்றைக் கற்றுக்கொடுத்த பெற்றோரையும், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன். அத்துடன் இதேபோல ஏனைய மாணவர்களும் திகழ வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. வே. திருச்செல்வம்

நெல்லியடி,
கரவெட்டி. (சி/7573)

சிறுப்பிட்டி மேற்கு
## ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்
## அலங்கார உற்சவம் - 1999

19-05-99 புதன் ஆரம்பம் பி. ப. 2.30 மணி
26-05-99 புதன் வேட்டைத் திருவிழா பி ப. 2.30 மணி
27-05-99 வியாழன் சப்பறத் திருவிழா பி. ப. 2 30 மணி
28-05-99 வெள்ளி தேர்த்திருவிழா காலை 10 மணி
29-05-99 தீர்த்தத் திருவிழா காலை 10 மணி

உற்சவகால குரு: கிரியாகலாபமணி
சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

(65827) ஆலய பரிபாலன சபையினர்

## வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து 1998 டிசெம்பர் க. பொ. த [சா/த] பரீட்சைக்குத் தோற்றி 8D சித்திபெற்ற

செல்வி அருந்தவபாலன் திருவதனி

அவர்களையும், சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்ற 49 மாணவர்களையும் வாழ்த்துவதுடன் அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

யா/டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி. (சி-7574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப் பரீட்சையில்

# தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கு

# திருமலையில் ஒரு வருடகால பயிற்சி

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு — கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்காக கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் பட்டதாரிகளுக்கு திருகோணமலையில் ஒருவருடகாலப்பயிற்சி வழங்கப்படவுள்ளது

மேற்படி போட்டிப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற வடக்கு — கிழக்கு மாகாணத்தின் சகல பகுதிகளையும் சேர்ந்த 109 பட்டதாரிகள் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 98 பேர் எதிர் வரும் வியாழக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு திருகோணமலையில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர் எனவும் —

இவ்வாறு தெரிவு செய்யப்படும் பட்டதாரிகளுக்கு பட்டம் பெற்ற பாடங்களின் அடிப்படையிலும், திணைக்களத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், பரீட்சார்த்திகளின் விருப்புரிமை அடிப்படையிலும் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனங்கள் வழங்கப்படும் எனவும் —

இவ்வாறு நியமனம் பெறுபவர்கள் நியமனத் திகதியில் இருந்து குறித்தொதுக்கப்பட்ட திணைக்களத்தின் திருகோணமலையில் உள்ள தலைமை அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் —

கடமையைப் பொறுப்பேற்றதும் அவர்களுக்கு ஒரு வருட காலப்பயிற்சி வழங்கப்படும் எனவும் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி திட்டத்தின்கீழ் நியமனம் பெறும் யாழ் மாவட்டப் பட்டதாரிகள் திருகோணமலையில் தங்கியிருந்து பயிற்சி பெறும் ஒழுங்குகளுடன் வரவேண்டும் எனவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

## கோண்டாவில் பகுதியில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், மே 18

ஓட்டைக் கழற்றி வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள் வீட்டுக்குள் இருந்த ஜெனரேற்றரைத் திருடிச் சென்றதுடன் மற்றுமொரு வீட்டினுள் நுழைந்து உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்தனர்

இந்தச் சம்பவம் கோண்டாவிலில் இடம்பெற்றது.

வீட்டினுள் புகுந்த திருடர்களில் ஒருவர் உறக்கத்திலிருந்த வீட்டுக்காரருக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த "ரோர்ச் லைற்"றை எடுத்து அவரது முகத்திற்கு நேரே ஒளியைப் பாய்ச்சிய வண்ணமிருக்க; ஏனைய திருடர்கள் ஜெனரேற்றரை எடுத்துச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு மணி நேரத்துக்குள்ளேயே அப்பகுதியிலிருந்த இன்னொரு வீட்டில் பெண்ணின் சங்கிலி திருடப்பட்டது

பத்துப்பேருக்கு மேற்பட்டோரைக் கொண்ட இந்தத் திருடர் கூட்டத்தினர் பொல்லு, அலவாங்கு பார்த்தடி ஆகியவற்றுடன் நடமாடுவதாகக் கூறப்படுகிறது

(இ-ரி)

## இரத்தினபுரி ஆயர் ஜனாதிபதியை சந்திப்பார்

### மடு உற்சவம் பற்றி ஆராய

கொழும்பு, மே 18

மடுத் தேவாலயத்தில் உற்சவம் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதியுடன் இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சு நடத்தவிருக்கின்றார்.

உற்சவ காலத்தில் எடுக்கவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடுவர்.

இம்முறை உற்சவத்தில் பங்குபற்ற 3 லட்சம் பக்தர்கள் வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது

அதே நேரம்— உற்சவத்துக்கு முன்னர் மடுத்தேவாலயப் பகுதியில் இருந்து படையினரை விலக்க படை அதிகாரிகள் இணங்கியுள்ள போதும் படை விலக்கலுக்கு பாதுகாப்பு அமைச்சு இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன

(இ-3)

## மகப்பேற்று விடுதிக் கட்டடம்

சங்கானை, மே 18

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்றுச் சிகிச்சைக்கான விடுதிக் கட்டடம் அரைகுறை நிலையில் கட்டி முடிக்கப்படாமல் உள்ளது

இதனால் இங்கு மகப்பேற்றுச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் தங்கி நின்று சிகிச்சைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

(இ-29)

# தென் மாகாணசபையை ஜே. வி. பி. கைப்பற்றும்

### பிரசாரக் கூட்டத்தில் உரை

அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தென் மாகாண சபைக்கான தேர்தலில் ஜே. வி. பியே பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சியை அமைத்துக்கொள்ளும் என அக்கட்சியின் பிரசாரப் பேச்சாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே. வி. பி. தற்போது மிகப் பெரிய கட்சியாக வளர்ந்து வருகின்றது. எதிர் காலத்தில் ஐ. தே. க மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் ஆதிக்கத்தை முறியடித்துக் கொண்டு ஜே வி. பியே ஆட்சியை அமைத்துக்கொள்ளும்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டின் முன்னேற்றத்துக்கும் ஜே வி. பியே அத்திவாரம் இடும்.

ஐ. தே. கவும், பொதுமக்கள ஐக்கிய முன்னணியும் தற்போது ஆட்டம் கண்டு வருகின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ 7)

# செய்திக் கொத்து

### பதவி வெற்றிடம்

அரியாலை, மே 18

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன

மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாச பொதுமுகாமையாளராக நியமனம் பெற்றுச் சென்றதை அடுத்து சங்கத்தில் பொது முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது

(ஐ-17)

### இரவுப் பாடசாலை

கொழும்புத்துறை, மே 18

குருநகர் கார்மேல் அன்னை ஆலய மண்டபத்தில் விரைவில் சிறுவர்களுக்கான இரவுப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நிதி உதவியை பிரான்சிலுள்ள இளைஞர் கழகம் வழங்கவுள்ளது.

(30-இ)

### புனரமைக்கப் படவில்லை

சண்டிலிப்பாய், மே 18

சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் சேதமடைந்த வகுப்பறைகள் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது

(க-135)

### படிக்குப் பதிலாக சைக்கிள் அச்சு

சாவகச்சேரி, மே 18

சாவகச்சேரி மீன் சந்தையில் மீன் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் சிலர் நிறுத்தல் படிகளுக்கு பதிலாக சைக்கிள் நடு அச்சினைப் பாவித்து வருகின்றனர். இதனால் நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-31)

### நியமனம்

மானிப்பாய், மே 18

மானிப்பாய் வடக்கு (ஜே/137) பிரிவின் கிராம அலுவலராக ச. சிவகுமாரன் கடந்த 3 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்-

(க-90)

★ ★ ★

தெல்லியடி, மே 18

நீண்டகால இடைவெளியின் பின்னர், வடமராட்சி கிழக்கு அம்பன் மருத்துவமனைக்கு பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக கே குணரத்தினம் என்பவர், யாழ் பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் கடந்த வாரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(க-109)

### மலசல கூடங்கள் அமைப்பு

சண்டிலிப்பாய், மே 18

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆறு புதிய மலசல கூடங்கள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

(க-135)

### முன்பள்ளிகள் பதிவு

சண்டிலிப்பாய், மே 18

வலி. தென் மேற்கு பிரதேச சபை பகுதியில் சனசமூக நிலையங்கள் நடத்திவரும் முன்பள்ளிகளைப் பதிவு செய்வதற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

(க-135)

### அதிபர் நியமனம்

உரும்பிராய், மே 18

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் அதிபராக க. ஆனந்தராசா நியமிக்கப்பட்டுள்ளார், இவர் இது வரை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

(க-154)

### மாணவருக்கு பாராட்டு

அச்சுவேலி, மே 18

வயாவிளான் கோணவளை செங்கொடி சனசமூக நிலையம் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசு வழங்கிக் கௌரவித்தது.

சன சமூக நிலைய பிரதேசத்தில் வசிக்கும் மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஆறு மாணவர்களும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற ஐந்து மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் வலி வடக்கு பிரதேச செயலர் திருமதி தி. பத்தினியம்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### ச.ச. நிலையங்களுக்கு அரச உதவி கிடைக்கவில்லை

சண்டிலிப்பாய், மே 18

வலி. தென்மேற்கு பிரதேசசபைப்பகுதியின் கீழ் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட 70 சன சமூக நிலையங்களுக்கும் கடந்த ஆண்டுக்கான அரச உதவி, நன்கொடைப் பணம் இதுவரை கிடைக்கவில்லை, எனவும்— இதனால் பல சன சமூக நிலையங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பொதுமக்கள் வாசிப்பதற்காக கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# புதிய கல்வி சீர்திருத்தப் பாட நூல்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு இன்னும் இல்லை

### ஆசிரியர் சங்கப் பிரமுகர் கவலை தெரிவிப்பு

அரசினால் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கல்விச் சீர் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாம் ஆறாம் மற்றும் ஒன்பதாம் வகுப்புக்களுக்குரிய பாடத்திட்ட நூல்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு இன்னும் வந்து சேரவில்லை

இதே வேளை இலங்கை முழுவதுக்குமான ஆங்கிலப் புத்தகங்களும் இதுவரை யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நல்லூர்க் கிளையின் கூட்டம் அண்மையில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் யாழ் மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் எ. தார்சீசியஸ் தலைமையில் நடைபெற்றது

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பு எனக் கூறிக்கொண்டு பாடசாலைகளைக் குழப்பிக் கொண்டிருக்கின்றது அது மட்டுமன்றி மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்படும் நூல்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கவில்லை.

தயாரிக்கப்படும் தமிழ்ப் புத்தகங்களிலும் இலக்கணப் பிழைகள் காணப்படுகின்றன இதற்கு புத்தகங்களைத் தயாரிக்கும் குழுவில் ஒரு தமிழர் கூட இல்லாமையே காரணம்.

இதனை வலியுறுத்தி எதிர் காலத்தில் தமிழர்களே தமிழ் நூல்களைத் தயாரிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ்ப்பாண வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

பல வருடங்களுக்கு முன் ஆசிரியர் காங்கிரஸ் என்ற அமைப்பு ஆசிரியர்களுக்காக குரல் கொடுத்தது பின்னர் அது செயற்படாமல் அருகிவிட்டது. இதன் பின் தமிழர் ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட்டு அது தமிழ் ஆசிரியர்களின் நலன்களுக்காகப் போராடியது.

தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் தமது சொந்தக்கருத்து முரண்பாடுகளைக் களைந்து 'தமிழ் ஆசிரியர்கள்' என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு ஒருங்கிணைந்து குரல் கொடுத்தால் பட்டுமே எழக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் எ. தார்சீசியஸ் தனது உரையில் :-

பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். நாட்டில் ஏற்பட்ட சில நெருக்கடிகள் காரணமாக நீண்டகாலம் இயங்காது போனாலும் இடப்பெயர்வின் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் எமது பிரதிநிதிகள் செயற்பட்டு ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவியுள்ளனர்.

அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஆசிரியர்களின் நலனுக்காக உழைத்தது தமிழர் ஆசிரியர் சங்கமே. தமிழ் ஆசிரியர்களை பொறுத்தவரை நமது நோக்கம் ஒன்றாக இருக்க வேண்டும் — என்றார். (இ-7-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட.-கிழக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

அரியாலை, மே 18

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தை உயர்த்துவதற்கான செயல் திட்டம் ஒன்று நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் செயல் திட்டத்தின் முதற்கட்டமாக சங்கங்கள் மதிப்பீடு செய்யப்படும்.

சங்கங்களின் செயற்பாட்டுக்கமைய சங்கங்கள் ஏ. பீ. சீ. டி. ஆகிய நான்கு பிரிவுகளாக வகுக்கப்படும். (இ-17)

# விண்ணப்பங்கள் கோரல்

நாவற்குழி, மே 18

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாக உள்ள பாடசாலை அதிபர் பதவிகளுக்கும் மற்றும் கலாசார உத்தியோகத்தர், முன்பள்ளி கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்.. ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர் மேலும் தமிழ், ஆங்கிலம், இந்துசமயம், சமூகக்கல்வி. ஆரம்பக்கல்வி, தொழில் நுட்பத்திறன், கவின்கலை, சித்திரம், வாழ்க்கைத் தகமைகள். முறைசாராக்கல்வி ஆகிய பாடங்களுக்கும் சேவைக்கால ஆலோசகர்பதவிகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ளன. (க-102)

## மருத்துவ பீடத்துக்கு அனுமதி கிடையாத மாணவன் வழக்கு

கொழும்பு, மே 18

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதிக்குத் தகுதியுடைய மாணவன் ஒருவருக்கு ஏன் அனுமதிவழங்கப்படவில்லை என்பதற்கான காரணங்களைத் தெரிவிக்கும்படி உயர்நீதிமன்றம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜராகும்படி பேராசிரியர்எஸ். திலகரத்தினவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் அழைப்பாணைகள் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் மருத்துவக் காரணங்களைக் காட்டிப் பேராசிரியர் திலகரத்தின நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. (இ-7)

## மாணவருக்கு பாராட்டு

சங்கானை, மே 18

அராலி இந்துக் கல்லூரி வரலாற்றிலே ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் முதல் முறையாக 8 பாடங்களில் விசேட சித்தியடைந்த மாணவன் ஒருவரையும் ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்பிறகு தகைமை பெற்றுள்ள 15 மாணவர்களைப் பாராட்டி திறமை நயம் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

அதிபர் எஸ். மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயம், பிரிவு-I இன் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா கலந்து கொண்டார். (இ-29)

## மீனவருக்கு கட்டு மரங்கள்

யாழ்ப்பாணம், மே 18

ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு 75 கட்டு மரங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டு மரங்களைக் கட்டுவதற்காக வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் 15 இலட்சம் ரூபா ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 15 வள்ளங்கள் வேலணை துறையூர், பாஷையூர், குருநகர், நாவாந்துறை, மணியந்தோட்டம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## தையல் டிப்ளோமா கற்கைநெறி

வலி. தென் மேற்கு மே 18

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்படும் தையல் டிப்ளோமா கற்கை நெறியில் 55 மாணவிகள்பங்குபற்றுவதாக கிராம அபிவிருத்தி அதிகாரி க. சிறிபதி தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தக் கற்கை நெறி ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள வளநிலையத்தில் நடைபெற்று வருகிறது. (இ-185)


## சான்றிதழ் இன்னும் இல்லை

வலி. தென் மேற்கு, மே 18

தமிழ் தட்டெழுத்து பயிற்சி நெறி முடிவடைந்து ஒருவருடம் ஆகியும் இதுவரை சான்றிதழ் கிடைக்கவில்லையென மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சித் திட்டத்தின் கீழ் பரீட்சை எழுதி சித்தி அடைந்தவர்களுக்கே [illegible] வழங்கப்படவில்லை. (இ-1ç8)

## ஓராண்டு நினைவஞ்சலி



முற்றத்து மலராய்

19 — 03 — 1944

வானத்து நிலவாய்

23 — 05 — 1998

### அமரர் பரமு நாகராஜா

பாசத்தின் உறைவிடமாய் இருந்து
எங்களை வாழவைத்த தெய்வமே— ஆண்டு
ஒன்றாகியும் எம்மை மீளாத்துயரத்தில் ஆழ்த்தி
விட்ட


அழகுத் திருமுகமும் அன்பான வார்த்தையும்
காணாமல் காயவில்லை எம் விழிநீர்
எம்மைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றாயோ?

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

395/4, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[65731]

## முதலாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



முகிழ்வு:

17 — 05 — 1931

உதிர்வு:

27 — 05 — 1998

அமரர்

### வைத்திலிங்கம் கனகரெட்ணம்

[ஓய்வு பெற்ற சாரதி ம. நகரசபை]

திதி: 18-05-1999

எம் அன்பின் சித்திரமே;
நல் ரத்தினமே அப்பா .....
நீர் என்னென்ன கனவுகளைச்
சுமந்தீரோ... அத்தனையும் பொடியாகிப்
போனதேனோ? நீரின்றி சிதறியதே
உம் குடும்பம் அதைத் திரும்பக் கட்ட
யார் வருவார்? எம் இதயக்குமுறலை
இவ்விடத்தில் அடக்கிவிட்டோம்...

எம் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி:- க. மோட்சலெட்சுமி.
மகன்:- க. சதீஸ் (Finland)
மகள்:- க. கமலினி.
[யாழ். கனகரெட்ணம் ம. ம.வி.]

15/5, புகையிரத வீதி,
புங்கன்குளம்

[65763]

## காணி தேவை

ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கான ஒரு செயல் திட்டத்துக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதிலிருந்து 2 கி. மீ சுற்றாடலில் 10 பரப்புக்குக் குறையாத விஸ்தீரணமுள்ள வெறும் காணி தேவை. அமைவிடம், விலை முதலியவற்றுடன் பின்வரும் விலாசத்துக்கு எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்:

அன்பளிப்பும் ஏற்றுக்கொள்ளப்படும்

செயலாளர்

### ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

39, கொழும்புத்துறை வீதி,
சுண்டுகுளி, யாழ்ப்பாணம்.

(சி/7571)

வலிகாமம்

## ப. தெ. வ. அ. கூ. ச. கொத்தணி ஊழியர் நலன்புரிச்சங்கம் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

பரிசுக்குரிய இலக்கங்கள்

1ஆம் பரிசு 2393 2ஆம் பரிசு 0444
3ஆம் பரிசு 0839

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 3413 | 1660 | 1743 | 2901 |
| 3606 | 3833 | 3365 | 0313 |
| 2628 | 1198 | | |

பரிசுக்குரியவர்கள் 28 - 05 - 99 ஆம் திகதிக்கு முன்னர் ரிக்கெட்டைச் சமர்ப்பித்துப் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் கொத்தணி மானிப்பாய்.

(65822)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்

26 — 03 — 1919

ஆண்டவன் அடியில்

17 — 04 — 1999

திருமதி

### வேலுப்பிள்ளை சின்னம்மா

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகள், மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்,
மைத்துனிமார்.

காளி கோயில் வீதி,
சுன்னாகம் கிழக்கு.
சுன்னாகம்.

(65817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மக்கள் மனம்

அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் நடைபெற்ற சண்டையில் ஒரு தரப்பில் இத்தனை பேரும் மறு தரப்பில் அத்தனை பேரும் இறந்தார்கள்; இத்தனை சடலங்கள் மீட்கப்பட்டன என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருவது போல—

இரண்டு தமிழ்க் கட்சிகளுக்கு (குழுக்களுக்கு) இடையில் நடைபெறும் மோதலில் வவுனியாவில் இத்தனை பேர் மரணமானார்கள்; கொழும்பில் இத்தனை பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; அங்கே இத்தனை சடலங்கள் மீட்கப்பட்டன; என்ற செய்திகளும் நாளாந்தம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன.

முதற்பந்தியில் குறிப்பிட்ட சம்பவங்களை வாசித்து, அறிந்து கவலைப்பட்டும் பழக்கப்பட்டும்போன தமிழ்மக்கள்.— மனம் நொந்து போயுள்ள தமிழ் மக்கள்—

இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்படும் சம்பவங்களை அறிந்து தமிழ் இனம் அழியத்தான் பிறந்ததா, அழிவுக்கு முடிவில்லையா என்று அதிர்ந்து போய் நிற்கிறது!

தமிழ் மக்களின் விடிவுக்காக உழைக்கப்போவதாக. போராடப் போவதாகப் புறப்பட்ட தமிழ் இளைஞர்கள், தமது பிள்ளைகள் தமக்குள் மோதிக் கொண்டு அவமாக மடிந்து போவதைக் கண்டு அவர்கள் துவள்கிறார்கள்.

இவர்கள் தமக்குள் அடிபட்டுச் சாவதற்காகவே மக்களாகிய எங்களது உரிமைகளைப் பெறுவதற்கெனப் புறப்பட்டவர்கள் என்றால், இவர்களது சேவை எங்களுக்குத் தேவையில்லை; அவர்கள் தமது பெறுமதிமிக்க உயிர்களைப் பலி கொடுக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள் மக்கள்.

தமிழர் விடுதலைக்காகப் போராடுவதற்கு ஆயுதம் ஏந்திய குழுக்களுக்கிடையே ஏற்கனவே மோதல்கள் நடைபெற்றதை மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் ஆயுதப் போராட்டத்தைத் துறந்து ஜனநாயக வழியில் தமிழர் உரிமைகளைப் பெறப்போவதாகக் கூறிக் கொள்ளும் இரண்டு கட்சிகள் (குழுக்கள்) தமக்கிடையே மோதிக்கொள்வது எந்த நியாயமான நோக்கத்தினைக்கருதியது எனக் கேட்டு தமிழர்கள் திணறுகிறார்கள்.

இந்த மோதல்கள் ஏனையோர் முன்னிலையில்— அவர்களின் மனதில்— தமிழர்களை சிரிப்புக்குரியவர்கள் ஆக்குகிறது; ஏளனப்படுத்துகிறது

தமிழர்களைப் பிளவுபட வைத்து. பிரித்து வைத்து. மோத விட்டு, அடிபட்டுச் சாகவிட்டு லாபம் அடைய விரும்புவோருக்கு இரை போடுகின்றன இந்த மோதல் சம்பவங்கள்.

நொந்து போயிருக்கும் தமிழர்களின் நலன்களுக்காக ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியவர்கள், இவ்வாறு மோதுண்டு சாவதானால் தமது கூடாரங்களைக் கழற்றிக் கொண்டு கலைந்து போவது மேல் என்ற கருத்தே தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது. இப்போதைய நிகழ்வுகளில் அந்தளவு வெறுப்புஉண்டாகியுள்ளது அவர்களுக்கு! சம்பந்தப்பட்டோர் மக்கள் மனம் அறிந்து தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும்.

# வடக்கை அறிவதற்கு தென்பகுதி

# இளைஞருக்கு கிடைத்த வாய்ப்பு

வடக்கு—தெற்கு இளைஞர்களுக்கிடையில் புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும், நட்புறவையும் கட்டி எழுப்பும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் தென்பகுதியிலிருந்து அழைத்துவரப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் யாழ். மாவட்டத்தின் பல இடங்களுக்கும் விஜயம் செய்து. வடபகுதி இளைஞர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் பற்றி அறிந்து கொண்டனர்.

கடந்த 10 ஆம் திகதி விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்கள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பல தரப்பட்டவர்களையும் சந்தித்து யாழ். மாவட்ட மக்களின் தற்போதையவாழ்க்கை நிலையை ஓரளவுக்குத் தெரிந்து கொண்டனர். இந்த இளைஞர் குழுவுடன் தென்பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் 15 பேரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

போக்குவரத்துப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, விவசாய மற்றும் கடலுணவுப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலை, மீளக்குடியமர முடியாது நலன்புரி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருப்போர் நிலை, பாதுகாப்பு உறுதிப்பாடு இல்லாத தன்மை உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பல மட்டங்களிலிருந்தும் இவர்களிடம் தெரிவிக்கப்பட்டது,

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் பலதரப்பினரும் தெற்கிலிருந்து குடாநாட்டுக்கு வந்து திரும்பிய போதிலும் நாட்டின் எதிர்காலத் தலைவர்களான இந்த இளைஞர் யுவதி

### செய்தி மடல்

களின் விஜயம் யாழ். மக்களின் அவல வாழ்க்கையைத் தென் பகுதிக்கு எடுத்துச் செல்லக்கூடியதாக அமைந்தது எனச் சொல்லலாம்.

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட இந்தக் குழுவினர் தீவுப்பகுதிக்குக் கூட்டிச் செல்லப்படாதது பெரும் குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகிறது இந் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த அதிகாரிகள் தீவுப்பகுதி மக்களின் நிலை தொடர்பாகவும் இவர்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக வாய்ப்புகளை ஏற்படுத்தவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது

பல தரப்பினரையும் சந்தித்த தென்பகுதி இளைஞர் குழுவினர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற சிரமதானப்பணியொன்றில் யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளுடன் கலந்து கொண்டனர்.

இச்சிரமதானப் பணியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உயர் அதிகாரிகள் மற்றும் வடமராட்சி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் சரத் கருணாரத்ன, நெல்லியடி பொலீஸ்நிலைய பொறுப்பதிகாரி எஸ். அகம்பத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிங்கள — தமிழ் மக்கள் உறவினை வளர்க்கும் வகையில் இந்தச் சிரமதானம் அமைந்திருந்தது. சிரமதானத்தை முடித்துக் கொண்ட குழுவினர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக்கு விஜயம் செய்தனர்.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தென்பகுதி இளைஞர். யுவதிகள் கடந்த சனிக்கிழமை மந்திகை மருத்துவமனை வளவில் சிரமதானம் மேற்கொள்வதையும் —

சிரமதானம் முடிவுற்ற பின்னர். அக்குழுவினர், இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள், படை அதிகாரிகளுடன் அமர்ந்திருப்பதையும் — மேலே உள்ள படங்களில் காணலாம்

(படங்கள்: நெல்லியடிச் செய்தியாளர்)

#### வரவேற்க முடியவில்லை

மேற்படி பாடசாலைக்குள்ளே சென்ற குழுவினரை வரவேற்ற ஆசிரியைகளில் ஒருவர் எம்மிடம் வரும் விருந்தினரை வாசலில் நிறைகுடம் வைத்து வரவேற்பது தான் எமது பண்பாடு. நீங்கள் பாடசாலையின் பின்புறமாக வந்தமையால் எம்மால் நிறைகுடம்வைத்துவரவேற்க முடியாமல் போய்விட்டது என்று கவலை தெரிவித்தார்; சாதாரணமாக வரவேற்றார்.

இதனைக் குறித்துக் கொண்ட தென்பகுதி பத்திரிகையாளர்கள், ஆசிரியை கூறியவற்றில் ஏதோ அர்த்தமிருப்பதை உணர்ந்து அவரைத் துருவித் துருவி கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். இந்தப் பாடசாலையில் வாசல் பகுதியில் படையினர் நிலை கொண்டிருப்பதால் பின்பகுதி மட்டுமே பாடசாலைக்குச் சென்றுவருவதற்கான நுழை வாயிலாக இருக்கிறது என்பதனை பத்திரிகையாளர்கள் பின்னர் தெரிந்து கொண்டனர்.

பாடசாலைக்குள் சென்ற பத்திரிகையாளர்கள் ஏனைய ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடிப் பல தகவல்களையும் பெற்றுக்கொண்டனர் பத்திரிகையாளர்கள் தனித்தனியே ஒவ்வொருவரையும் சந்தித்துக் கொண்டிருக்க கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் மாணவர்கள் தென்பகுதி மற்றும் வடபகுதி இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடபிராந்திய இயக்குநர் எஸ். பேரானந்தம் உரையாற்றும் போது கூறியதாவது:-

சிங்கள — தமிழ் இளம் சந்ததியினரிடையே நட்புறவை வளர்க்கும் நோக்குடன் கடந்த வருடம் இந்த நட்புறவுப் பாலம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இளைஞர் யுவதிகளுக்கிடையில் சமத்துவத்தை வளர்த்து அவர்களை நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்கத் தூண்டும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு செல்லும் இளைஞர்கள் அந்தப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார. கலாசார பண்புகளை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

தென்பகுதி இளைஞர் யுவதிகள் தற்பொழுது பருத்தித்துறையில் தங்கியிருந்து இப்பகுதி மக்களின் கலாசார பழக்கவழக்கங்களை அறிந்து கொண்டுள்ளனர் இதே போன்று இப்பகுதியிலுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளும் விரைவில் தென்பகுதிக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்குள்ள மக்களுடன் தங்கியிருந்து அவர்களுடைய கலாசாரம் மற்றும் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்—என்று கூறினார்.

தேசிய இளைஞர் சேவை மன்ற(யாழ். மாவட்ட) உதவி இயக்குநர் ரி. சிவதட்சாணாமூர்த்தி உரையாற்றும் போது—

தேசிய இளைஞர்சேவை மன்றநடவடிக்கைகளில் பாடசாலை மாணவர்களையும் ஈடுபடச்செய்யும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன. மாணவர்கள் பாடசாலையைவிட்டு வெளியே வருகின்றபோது அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு ஏற்பட்டுள்ளது — என்றுதெரிவித்தார்.

மகரகம தேசிய இளைஞர் மன்ற உதவி இயக்குனரான அபா உபசேன உரையாற்றும் போது கூறியதாவது—

மாணவர்கள் சமுதாயத்திற்கு உதவக் கூடியவகையில் நாம் திட்டங்களைத் தயாரித்துள்ளோம்.

தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பின்தங்கியகிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மாணவர்கள் மூலம் அக்கிராமங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அபிவிருத்திப்பணிகள் முன்னெடுத்துச்செல்லப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் இத்திட்டங்கள் குறித்து தொடர்பு கொண்டுள்ளோம். விரைவில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர். மொழிப் பயிற்சித் திட்டம் மூலம் சிங்கள இளைஞர்கள் தமிழையும் தமிழ் இளைஞர்கள் சிங்கள மொழியையும் கற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் யாழ். மாவட்டத்தில் சிங்கள மொழியைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்கிறது— என்று சொன்னார்.

இதன் பின்னர் தென்பகுதி இளைஞர்களும் யுவதிகளும் பாடசாலை மாணவிகளுடன் இணைந்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

### கேசரி

இளைஞர் குழுவுடன் வந்த கொழும்புப் பத்திரிகைகளான ராவய, யுக்திய, ஜலன்ட் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் விடுதலைப்புலிகளைச் சந்திக்க ஆர்வம் கொண்டிருந்தனர்.

அவ்வாறான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து தர முடியுமா என்று கேட்டனர். விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் தற்பொழுது தொடர்புகள் எதுவும் இல்லை அவ்வாறு சந்தித்தால் கூட நாம் படையினரால் கைது செய்யப்படக் கூடும் என்று யாழ்ப்பாணத்து நிலைமை அவர்களுக்கு விளக்கப்பட்டது.

பத்திரிகையாளர் என்ற வகையிலாவது அவர்களுடன் நீங்கள் தொடர்பு வைத்திருக்க வேண்டும் தென்பகுதியில் ஜே. வி. பி. தடை செய்யப்பட்டிருந்த காலப்பகுதியில் நாங்கள் (பத்திரிகையாளர்கள்) அவர்களுடன் தொடர்பினை வைத்திருந்தோம். அப்படியானால் நீங்கள் மட்டும் ஏன் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கக் கூடாது— என்று அவர்கள் கேட்டனர்.

நீங்களும் நாங்களும் ஒரே தொழிலசெய்பவர்கள் தானே என்று கேட்டார்கள். ஆம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

வைகாசி 05

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி முற்பகல் 9.17 வரை.

நட்சத்திரம்: புநர்பூசம் பின்இரவு 4 54 வரை.

சுபநேரம்: 4 22 - 5 52

ராகுகாலம்: [illegible]

[பகலுக்கும் [illegible] பழைய நேரப்படி]

### உதயவாக்கு

உன்னுடைய உடல் பொருள் எல்லாம் பிறர்க்குப் பயன்படும்படி வாழ்ந்திரு.

ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

# எங்களுக்கு நீதி வழங்க எவருமே இல்லையா?

அண்மையில் யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு மத்திய அரசின் கீழ் வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் 276 பேருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டது தொடர்பாக பெயர்ப்பட்டியல் ஒன்று வெளியானது தெரிந்ததே.

எனினும் இந் நியமனம் தொடர்பாக பல சந்தேகங்கள எழுகின்றன. பட்டம் பெற்று வெளியேறிய ஆண்டு மூப்புரிமை அடிப்படையில் இந்நியமனம் இடம் பெறும் என்று அரசாங்க அதிபரினால் கூறப்பட்டது. வேலையற்ற பட்டதாரிகள் சங்கமும் இதனை அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தது.

ஆனால் நடந்தது என்ன? 13—03 –96இல் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகள் சிலரும், 1996 இல் பட்டம் பெற்று வெளியேறிய வெளிவாரிப் பட்டதாரிகள் பலரும் புறந்தள்ளப்பட்டு 1997இல் வெளியேறிய பட்டதாரிகளும் வடக்கு—கிழக்கு மாகாண சபயின் ஆசிரிய நியமனம் பெற்ற 1996 பட்டதாரிகள் ஒரு சிலரும் உள்வாங்கப்பட்டிருகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட 1996 இல் பட்டம் பெற்ற வேலையற்ற ஏனைய பட்டதாரிகள் நிலை என்ன? வடக்கு — கிழக்கு மாகாணசபையினால் வழங்சப்பட்ட ஆசிரிய நியமனம் கூட கிடைக்காமல் தவிக்கும் இப்பட்டதாரிகளுக்கு இனிவரும் காலப்பகுதியில் எந்த நியமனம் கிடைக்கும்? எங்களுக்கு நீதி வழங்க எவரும் இல்லையா? மூப்புரிமை என்பது கேலிக்கூத்தா?

**பாதிக்கப்பட்ட பட்டதாரி**

கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

# தவிர்க்கப்பட்டது ஏன்?

பட்டதாரி நியமனம் பெறும் முதற் தொகுதியினரின் பெயர் விவரங்கள் தற்போது வெளியாகியிருந்தன. இதில் 1997 ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய சகல பட்டதாரிகளும் கருத்திற்கொள்ளப்பட்டு நேர்முகப் பரீட்சையில் கூடுதற் புள்ளி பெற்றவர்கள் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் 1998 ஆம் ஆண்டு தை, மாசி மாதங்களில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய விஞ்ஞானப் பட்டதாரிகள் மட்டும் இத் தொகுதியில் இடம்பெறவில்லை. 98 ஆம் ஆண்டில் இறுதிப் பரீட்சையை எழுதிய இவ் விஞ்ஞானப் பட்டதாரிகளும் 97 ஆம் ஆண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய கலை, விவசாய, விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகளும் ஒரே கல்வியாண்டில் பட்டம் பெற்று வெளியேறியவர்களே.

இவர்களுக்குரிய இறுதியாண்டு விரிவுரைகள் 96 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டபோதும் பல்கலைக்கழகநிர்வாகத்தின் அசமந்த போக்கு காரணமாகவே 1997 ஆம் ஆண்டு தோற்ற வேண்டிய இறுதிப்பரீட்சைக்கு 98 ஆம் ஆண்டு தை. மாசி மாதங்களில் தோற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டனர். இதனாலேயே இவர்களின் பட்டம் செல்லுபடியாகும் திகதியாக இறுதிப்பரீட்சை நடைபெற்று முடிந்த திகதி இவர்களுடைய சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது

எனவே இவர்களையும் ஏனைய பட்டதாரிகளையும் ஒரே ஆண்டு பட்டம் பெற்றவர்களாகக் கருதி இப்பட்டதாரிகள பாதிப்படையா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

**—விஞ்ஞானப் பட்டதார்**

யாழ்ப்பாணம்.

# அஞ்சல் அத்தியட்சகரின் பதில்

தங்களின் 07—05 – 99ஆந் திகதிய நாளிதழில் ஐந்தாம் பக்கத்தில் ''வாசகர் திருமுகம்'' பகுதியில் ''காரைநகரில் தபாற்சேவை'' என்ற தலைப்பில் திரு. சி கதிராசி எழுதிய மடல் தொடர்பாக, யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் என்ற ரீதியில் பின்வரும் தகவல்களைத் தங்கள் பத்திரிகை மூலம் பொதுமக்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலகத்திலிருந்து காரைநகர் அஞ்சலகத்திற்கு நேரடியாகப் பேருந்து மூலம் தபாற்பைகள் அனுப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக 10—05—99 திங்கட்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது

குடாநாட்டில் உள்ள அனைத்து அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களுக்கும் தொலைபேசி வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இவ் வேலைகள் இன்னும் பூர்த்தியாகாமல் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வாசகர் திருமுகத்தின் மூன்றாவது பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாகவும் முத்திரைத்தட்டுப்பாடு தொடர்பாகவும் உண்மை நிலையை அறியும் பொருட்டு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறியத்தர விரும்புகின்றேன்.

**சி தர்மராஜன்**
பிரதேச அஞ்சல அத்தியட்சகர்
யாழ்ப்பாணம்.

07—05—99

# சமுர்த்தி ஊக்குவிப்பாளர் கஷ்ட நிலை

வலி வடக்கு, மே 18

யாழ் மாவட்டதில் கடமையாற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றரை வருடங்களாகியும் இவர்களுக்கு உரிய நியமனக் கடிதங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-86)

# மீண்டும் பாடசாலை பஸ் சேவை

நெல்லியடி, மே 18

நவிண்டில், கொற்றாவத்தை, இரும்பு மதவடி ஊடாக, மீண்டும் பாடசாலை பஸ் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பல வருடகாலமாக இப் பாதை ஊடான பாடசாலை பஸ் சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதனால் இப்பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஏ. கே. நடராஜா பருத்தித்துறை இ.போ.ச டிப்போ முகாமையாளருக்கு தெரிவித்ததையடுத்தே, விரைவில் இப்பகுதி ஊடாக பாடசாலை பஸ் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(க-109)

வடக்கை...

(7 ஆம் பக்கத் தொடர்)

தொழில் ஒன்றுதான். மொழி வேறல்லவா. அதனால் எங்களுக்குப் பிரச்சினை. இந்த விடயத்தில் மட்டுமல்ல எல்லா விடயத்திலும் தமிழர்கள் என்பதறகாகப் பாராமுகமாக நடத்தப்படுகிறோமோ என்று விவரித்ததும் அவர்கள் இது தொடர்பான தமது பேச்சினை நிறுத்திக் கொண்டனர். ★

[ வளரும் [

# நவாலி ஊன்று கோல் அறப்பணியகம் உதவி

நவாலி, மே 18

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க. த. க.பாடசாலையைச் சேர்ந்த 8 மாணவர்களுக்குத் தலா 500 ரூபா வழங்கியுள்ளது,

சென். பீற்றர்ஸ் பாடசாலை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் சிறில் சுகந்தரன் அறப்பணியகத்தைச் சேர்ந்த க. நடேசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த அறப்பணியகம் இப்பகுதியில் ஜீ சீ ஈ சாதரணதர வகுப்பிலும், ஜீ சீ ஈ உயர்தர வகுப்பிலும் கல்வி பயின்று வரும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதா மாதம் ஒருதொகைப் பணத்தை வழங்கி வருவதுடன் கணவன்மாரை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கும் பல உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [இ–100]

# ஜூலையில் உள்ளூராட்சி வா[ரம்]

உள்ளூராட்சி வாரம் ஜூலை இறுதி வாரத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக மாவட்ட, மாகாண தேசிய மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களிடையே போட்டிகள் நடத்தப்படும்.

இந்த வாரத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகும்.

இதில் உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாகம், நிதிக் கட்டுப்படு பொது நிதிப் பயன்பாடு, வருமான அறவீடு உள்ளூராட்சி மன்ற சேவைகளின உச்சப்பயன்பாடு ஆகிய செயற்பாடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள பிராநதிய ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமியால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-31)

## கரவெட்டியில்

# நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 28 ஆம் திகதி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணி நடைபெறவுள்ளது என யாழ். செயலக நிறுவை அளவை பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் நிறுவைகள் அளவைகள் சாதனங்களைப் பயன்படுத்துவோர் தமது சாதனங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திணைக்கள உத்தியோகத்தரின் நேரடிப் பரிசோதனையின் போது முத்திரையிடப்படாத நிறுவைகள், அளவைகள் சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டால் கடும் சட்ட நடவடவடிக்கை எடுக்கப்படும் என வை. கிருஷ்ணதாசன் மேலும் தெரிவித்துள்ளார். (க - 30)

# சேக்கிழார் குருபூசை

யாழ். சைவ பரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சேக்கிழார் குருபூசை எதிர்வரும் வியாழக்கிழமை நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-17)

## லங்கா சித்த ஆயுர்வேதமருத்துவக்கல்லூரி

# போராட்டத்துக்கான காரணத்தை விளக்கி மாணவர்கள் அறிக்கை

தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தொடர்ந்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்துவரும் லங்கா சித்தஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது போராட்டத்துக்கான காரணங்களை விளக்கி பத்திரிகைக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியாகும். அது பாரம்பரிய மருத்துவத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அதாவது தலைமுறை தலைமுறையாக தரமான சுதேச வைத்தியர்களை உருவாக்கும் நோக்கில் ஜே. பஸ்தியாம்பிள்ளை அவர்களால் 1925 ஆம் ஆண்டு ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னர் இது யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டு வந்தது.

பின்னர் பல்வேறு இந்திய இலங்கை வைத்தியர்கள் [illegible] களாக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டனர்.

ஆரம்பத்தில் இக் கல்லூரியின் பரீட்சைகளை இந்திய பரீட்சைச் சபை நடத்தி வந்தது. 1951 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி அரச அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்ட கல்லூரியாக இது மாறியது.

இதன் பின்னர் கல்லூரியில் கல்வி கற்று இறுதி வருடப் பரீட்சையில் சித்தி எய்திய அனைத்துப் பரீட்சார்த்திகளும் ஆயுர்வேதத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டனர். இக் கல்லூரியினால் வழங்கப்படும் பட்டம் டி.ஏ எம். (DAM) எனவும் குறிப்பிடப்பட்டது.

சித்த ஆயுர்வேத மருத்துவத்துறைக்கு அடித்துணையான நாடி மருத்துவம் அதாவது நாடி சாஸதிரம் அன்று தொடக்கம் இன்று வரை செயற்முறையுடன் கற்றுணர்ந்து அதன்வழி ஒழுகிய மகான்களால் இங்கு போதிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய கல்விமுறைஇந்தக் கல்லூரிக்கு மட்டுமே தனிச் சிறப்புடையதாகும். பரராஜசேகரம்: செகராஜ சேகரம், சொக்கநாதன் தன்வந்திரியம், இருபாலை செட்டியார் வைத்தியத் தெளிவு — வைத்திய விளக்கம், பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம், பிராணரஷாமிர்தம், ஆத்மரஷாமிர்தம், சித்தமருத்துவதிரட்டு ஆகிய நூல்களைக் கற்றுணர்ந்து சேவையையே தமது நோக்கமாகக் கொண்ட ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினால் சுமார் ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் இந்தக் கல்லூரியில் இருந்து பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

இத்தகைய அரும்பணிகளை ஆற்றிய இந்தக் கல்லூரி இன்று கவனிப்பாரற்ற நிலையில் இருப்பது வருந்தத்தக்க தொன்றாகும்

பாரம்பரி வைத்தியத்தை யாழ் மண்ணில் மீண்டும், வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமானால் மேற்படி கல்லூரி சிறந்த முறையில் பரிபாலிக்கப்படவேண்டும். இதற்கு தமிழ்க்கட்சிகள், பரம்பரை வைத்தியர்கள் யாழ். மண்ணில் விசுவாசம் கொண்டவர்கள் தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக இந்தக் கல்லூரியை யாழ். பல்கலைக்கழகத்துடன் ஓர் அங்கமாக இணைத்துச் செயற்பட ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்தோடு இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்தே நாம் தற்போது வகுப்புக்களைப் பகிஷ்கரிப்புச் செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட விசேட அனுமதி பெறும் மாணவர் விவரம் இவ்வாரம் தெரியும்

யாழ்ப்பாணம், மே 18 யாழ்: பல்கலைக்கழகக் கலைப்பீடத்துக்கு 1997—98 ஆம் கல்வி ஆண்டுக்கு விசேட பாடங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு தொகுதி மாணவர்களின் பெயர் விவரங்கள் இந்த வார இறுதிக்குள் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு துணைவேந்தருக்கு அறிவித்துள்ளது.

விசேட பாடங்களின் அடிப்படையில் அனுமதி பெறும் மாணவர்களின் பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் போதனை சாரா ஊழியர்கள் இரண்டு வாரமாக மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக அவற்றை உரிய காலத்தில் வெளியிட முடியவில்லை என்றும் மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதே வேளை—

மேற்படி விசேட பாடத் தெரிவின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு 200 க்கும் அதிகமான மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்குச் சாத்தியம் இருப்பதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிதார். (ஐ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 02 — 1939



மறைவு: 18 — 04 — 1999

அமரர்

### சுப்பிரமணியம் பொன்னுத்துரை

[சரவணை]

இன்னும் பல காலம்
இருநதே நீங்கள் எமக்கு
முன்னுதாரணமாய் இருப்பீர்கள் என்று
முனைப்புடன் நாம் இருந்தோம்
சொல்லாமல் எங்கய்யா சென்றீர்?
நல்லையம்பதியில் சட்டநாதர்
நாயகி அம்பாளிடம் நிதம்
எல்லையில்லா அன்பு கொண்ட வள்ளலே!
தொடர்வோம் உன் பணிகளை
தில்லையில் நடம் புரியும்
சோதியில் கலந்து
சுவர்க்கம் அடைவாயாக!

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே! என்றும் நேசத்தால் நிறைந்தவரே! என்றும் எமைக் காக்கும் தெய்வமே! எங்கள் ஆருயிர் அப்பா கண்ணீர் பூக்சொரிந்து உம் தாள் வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

அந்தியேட்டிகிரியை 17—05—99 (திங்கட்கிழமை) நாச்சிக்குடா கடற்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் இன்று 18—05—99 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

பொ. கமலநாதன்
ஜெகன் பல்பொருள் வாணிபம்,
மல்லாவி.

(65838)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

வருடந்தோறும் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்: பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டை ஒட்டி இம்முறை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்கு பற்றுவதற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் தினம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையாகும்.

பங்குபற்ற விரும்பும் கழக அணிகள் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அலகுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன. (உ)


மங்களகரமான



திறப்பு விழா



வடமராட்சியில்

பி. ஜெ. பர்னான்டோ

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்!
பல் கட்டுபவர்கள்!

எமது வடமராட்சி வாழ் மக்களின், வாடிக்கையாளர்களின் நலன் கருதி
தமது கிளை ஸ்தாபனத்தை
நெல்லியடியில்
நாளை [19 - 05 - 99] புதன்கிழமை
திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்.

வடமராட்சியிலிருந்து வரும் எமது வாடிக்கையாளர்கள்
நாளை முதல் நெல்லியடியில்
தங்களுடைய கண்ணாடி மற்றும் பல்கட்டும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

நாளை புதன்கிழமை 19 – 05 – 1999 இல் வரும் சுபவேளையில்
உயர்திரு, S. கணேசமூர்த்தி (இளைப்பாறிய அதிபர்)
அவர்களால் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

உங்கள் ஆதரவே எங்கள் வளர்ச்சி!

உங்கள் அன்பான ஆதரவுக்கு என்றும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

தலைமையகம்:
உரிமையாளர்: லயன் A. ஜெயக்குமாரன்
பி. ஜெ. பர்னான்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளையகம்:
மோகன்ஸ்
பி. ஜெ. பர்னான்டோ
யாழ். வீதி,
(மக்கள் வங்கி முன்பாக),
நெல்லியடி.
T. P. No: 3212

(சி/7578)


## சமய சந்நிதிகளில்

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். (ஐ-73)

★ ★ ★

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் மண்டல பூர்த்தி மஹா சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற உள்ளது.

இரவு பூந்தண்டிகையில் பூரணை, புஷ்கலாதேவி சமேத ஐயனார் வீதிவலம் வருவார், 'அருணகிரிநாதர்' என்னும் பொருளில் கலாவினோதன் சின்னமணி குழுவினரின் வில்லுப்பாட்டும் நடைபெற உள்ளது. (ஐ-73)

★ ★ ★

சங்கானை வெல்வில் இலுப்பைத்தாள் முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினந்தோறும் விசேட அபிஷேகம், பூசைகள் காலை 8. 00 மணி தொடக்கம் 10 மணி வரை நடைபெறும்.

★ ★ ★

தொல்புரம் மடததடி அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான பஞ்சமுக விநாயக மணவாளக் கோலத்திருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மேற்படி ஆலய பரிபாலன சபையினரும், தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினரும் கூட்டாக இணைந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் மு. கிருஷ்ணபிள்ளை தலைமையில் ஆலய மண்டபத்தில் ஆலய நாதஸ்வர வித்துவான் இ. சிவகுமாருக்கு பட்டமளித்து கௌரவிக்கவுள்ளனர். (ஐ 30)

## மரண அறிவித்தல்கள்

### வைரவிப்பிள்ளை விசாகலிங்கம்

(மேற்பார்வை அதிகாரி, துறைமுக அதிகாரசபை, திருகோணமலை)

தொண்டமனாறு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை உப்புவெளியை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைரவிப்பிள்ளை விசாகலிங்கம் 16—05—1999 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி அருநாம்பிகை விசாகலிங்கம்

663, ஏகாம்பரம் வீதி,
உப்புவெளி,
திருகோணமலை.

(சி/7582)

### முத்துச்சாமிஐயர் இராசலட்சுமி அம்மா

குடியிருப்பு, சுளிபுரத்தைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி அம்மா 17 - 05 - 99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சுழிபுரம் காலஞ்சென்ற முத்துச்சாமிக் குருக்கள் - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற பறாளாய் முத்துச்சாமி ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், பாலகுருசாமி சர்மா, இரத்தினேஸ்வரி, சண்முகநாதன் (சிவானந்தம்), சரோஜினி, பத்மாவதி, சுசீலாதேவி, கல்யாணி, ஸ்ரீ ரமணன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், விசாலாட்சி, சோமாஸ்கந்தக் குருக்கள், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற தியாகராஜக் குருக்கள், சிவசண்முக சர்மா, சோமாஸ்கந்த சர்மா, சிவகாங்கேய சர்மா, பிரசன்னா, சத்தியவாகீஸ்வர சர்மா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-05-99 இன்று செவ்வாய்க்கிழமை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகத் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலகுருசாமி சர்மா
(மகன்)

குடியிருப்பு,
சுளிபுரம்.

(65843)

### திருமதி செபமாலை ஞானம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 19/13, அடப்பன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செபமாலை ஞானம்மா நேற்று (17-05-99) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலையின் அன்பு மனைவியும் பாக்கியம், இராசமணி, அருளம்மா, மரியதாஸ் (ராஜா ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு), இராசரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரவியம், இராசகுமார், பத்திநாதர், ரஞ்சா, மலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெராட், ரஜனி, ரஞ்சினி, ஜெயம், சரோ, சேவியர், சாந்தினி, மாலினி, ரதி, சாந்தன், விஜி, சுரேஸ், ரெஜி, ஜஸ்மின், ராஜன், துஷா, டிஜன, டெவோரன், டெரோணிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிரோஷன், தனுஷன், டினுஷன், ஜெனோஷா, வினுஷன், லிமோஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19-05-99) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு (புதிய நேரம்) அடப்பன் வீதியில் இருந்து நல்லடக்கத்துக்காகச் சில்லாலை புனித யாகப்பர் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மரியதாஸ்
(மகன்)

19/13, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/2475]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதிக் கொள்வதை விடுத்து பேச்சு மூலம் தீர்வு காணுங்கள்

## ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

கொழும்பு, மே 18

எமது சக இயக்கங்களின் தோழர்களே! தயவு செய்து எந்தவொரு பிரச்சினையையும் பேசித் தீர்க்க முயற்சி செய்யுங்கள். ஒருத்தரை ஒருத்தர் அழிப்பதில்லை என்று முடிவு எடுக்கப்படுமாயின் எந்த விடயமும் பேசித்தீர்க்கப்படக் கூடும்.

ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த சில மாதங்களாக வவுனியாவிலும் அதனைத் தொடர்ந்து கொழும்பிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இயக்க மோதல்கள் மக்கள் மத்தியில் வெறுப்பையும் அச்சத்தையும் உருவாக்கி வருகின்றன; தொடர்ச்சியான யுத்தத்தால் சீரழிக்கப்பட்டு இடப்பெயர்வும் அகதி வாழ்வும் பசியும் பட்டினியும் என பொதுமக்கள் அல்லல் படுகின்றனர்.

மக்கள் இவ்வாறு அல்லல் படுகின்ற இந்த நேரத்தில் அவர்களின் விடிவுக்காகஆயுதமேந்தியதாகக் கூறிக்கொள்பவர்கள் தமக்குள் சுட்டுக் கொள்வது அநாகரிகமானதும் பக்குவமற்ற செயற்பாடுமாகும். நீண்ட காலப் போராட்டத்தில் சகல தரப்பினராலும் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது இன்னுயிர்களை இழந்துள்ளனர். விலை மதிக்க முடியாத இந்த இன்னுயிர்கள் தொடர்ந்து அநியாயமாகப் பறிக்கப்படுவது ஆழ்ந்த கவலையைத் தருவதாகும்.

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கும் எமது மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வருவதற்காக உழைக்க வேண்டியவர்கள் அதற்காக ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியவர்கள் ஒருவரை ஒருவர் அழித்தொழிப்பதன் மூலம் கூடிப் பேசுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வோர் இயக்கமும் தனக்கென ஒரு குறுகிய வட்டத்தினை ஏற்படுத்திக் கொண்டு அதற்குள் இருந்து சிந்திக்காமல் எமது மக்களின் இன்றைய நிலை அவர்களின் துன்ப துயரங்கள் என்பவற்றைப் புரிந்துகொண்டு அவர்களின் நலன்களில் இருந்து சிந்தித்தால் இப்படியான அனாவசியமான மோதல்களை நாம் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

தொடரும் இயக்க மோதல்களால் எமது மக்கள் பலர் தமது இன்னுயிர்களை இழக்கின்றார்களே தவிர இதனால் எதனையும் சாதித்துவிடப் போவதில்லை ஒவ்வொரு கொலையும் ஒரு குடும்பத்தையே நடுத்தெருவுக்குக் கொண்டுவருகின்றது என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

எனவே இந்த அனாவசிய கொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து பிரச்சினைகளை பேசித் தீர்க்க முன்வருமாறு ஈ பி ஆர். எல். எவ். கோருகின்றது. (ஐ-6)

## விவசாய சேவை பரீட்சை யாழ்ப்பாணத்தில்

கொழும்பு, மே 18

விவசாய திணைக்களத்தின் இலங்கை விவசாய சேவை வகுப்பு II, தரம் II க்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர் வரும் ஜூன் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சை கொழும்பில் நடத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ். பரீட்சார்த்திகளின் நன்மைகருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்களை அடுத்து பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (ஐ-6)

## ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ். செயலகம் மாவட்டத்தில் உள்ள கழக அணிகளுக்கு இடையில் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் இன்றும் நாளை மறுதினமும் பிற்பகலில் யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெற விருக்கின்றன. பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**இன்று**

★ 3-30 மணி: பல்கலைக் கழக அணி எதிர் யாழ்ப்பாண கல்லூரி

★ 4-30 மணி: ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. அணி எதிர் பற்றிஷியன் வி. க. அணி.

**நாளை**

★ 3-30 மணி ஜொனியன் வி. க. அணி எதிர் அளவெட்டி இளைஞர் வி க

★ 4-30 மணி: கிறாஸ் கொப்பர்ஸ் வி. க; அணி எதிர் பரமேஸ்வரா வி. க. அணி.


Institution of Engineers Sri Lanka Centre
Northern Province

Talk by: Dr. V. Navaratnarajah
Subject: Forensic Engineering (Investigative reporting of Civil Engineering Structures)
Date & Time: Thursday 20th May 1999 at 3-30 p m.
Venue: Library Auditorium, University of Jaffna.

All Engineers, Technical Officers, Contractors and Interested Public invited,

— Secretary

(65835)



விற்பனையாகிறது

* மனோரமா இயர் புக் — 1999
* தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான 20 முன்னோடிப் பரீட்சைத் தாள்கள்
ஆசிரியர் — P. அம்பிகைபாகன்
* எழுதுநர் சார்ந்த சேவை போட்டிப் பரீட்சை — வழிகாட்டி.

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7580)


## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்)

வத்துக்கு எதிராக மக்களிடையே பிரசாரம் செய்வது, புலிகளால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் மூலம் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடத்துவது ஆகிய நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபட்டிருந்ததை அவர்கள் ஒப்புக் கொண்டதாகவும் —

அவர்களிடம் இருந்து இரண்டு கிரனேட்டுக்களும், வேறு சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் —

மேஜர் ஜெனரல் மாரம்பே தெரிவித்தார்;

கைதானவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள்; அவர்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன; மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்றும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள இந்த எட்டுப் பேருடனும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட எட்டுப் பேரின் பெயர் விவரம் வருமாறு:-

★ குமாரசாமி உதயசூரியன் ( வயது 24 — கொக்குவில் )

★ விவேகானந்தன் ஜெயந்தன் ( வயது 21 — பொற்பதி வீதி, கொக்குவில் )

★ பாலசுந்தரம் பாலமயூரன்(வயது 22— உரும்பிராய்)

★ முத்துலிங்கம் ஜெயகாந்தன் (வயது 22 — கோண்டாவில் வடக்கு )

★ துரைசிங்கம் மோகனராஜா ( வயது 27 — உரும்பிராய் தெற்கு)

★ நந்தகோபால் பிரகாஸ் (வயது 18 — பொற்பதி வீதி, கொக்குவில்)

★ செல்வராசா நந்தகோபால் (வயது 21 —வளாக வீதி, கொக்குவில்)

★ கதிர்காமத்தம்பி சிறிஸ்காந்தா (வயது 48 —பொற்பதி வீதி, கொக்குவில்)

இவர்களில் கொக்குவிலைச் சேர்ந்த ஆறு பேரும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டதாக அறியவந்தது.

(ஐ-5-6-17-173)

# சீநோர் முகாமில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், மே 18

குருநகர், நயினாதீவு மற்றும் மட்டுவில் பகுதிகளில் வைத்து மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

குருநகர் சீநோர் முகாமில் வைத்து கடந்த 16 ஆம் திகதி செல்லையா யோகேஸ்வரன் (வயது 25, ஆனைக்கோட்டை) என்பவரும் —

மட்டுவில் தெற்கு வளர்மதி வீதியில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த மாணவனான சிவலிங்கம் பகீசன்(வயது 16) என்பவர் கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

நயினாதீவைச் சேர்ந்த சாந்தலிங்கம் விபுலானந்தன் (வயது 21) என்பவர் அங்கு வைத்து கடந்த 15 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வன்னிப் பகுதிக்கு நேற்று வாகன அணி சென்றது

வவுனியா, மே 18

கடந்த ஒரு வாரகாலமாகத் தடைப்பட்டிருந்த இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான வாகன அணி மூலமான உணவு விநியோகம் மீண்டும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து 12 லொறிகள் மட்டுமே உயிலங்குளத்துக்கு வந்தன. இதனால் வவுனியாவில் இருந்து சென்ற 20 லொறிகளில் 8 லொறிகள் உணவுப் பொருள்களுடன் மீண்டும் வவுனியாவிற்குதிரும்பின என மன்னார் அரசஅதிபர் வி. குரூஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்து வரும் லொறிகளின் உரிமையாளர்கள் தமது பிரயாணக் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரி இருந்தனர் எனினும் கட்டணம் அதிகரிக்கப்படாததை அடுத்து அவர்கள் வவுனியாவுக்கு லொறிகளை எடுத்துச் செல்ல மறுத்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக அறியவந்தது.

கிளிநொச்சியில் இருந்து உயிலங்குளத்துக்கு செல்லும் தற்போதைய பாதை மிக நீண்டதாக இருப்பதால் தமது பிரயாணத்துக்கான கட்டணம் 3 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் என்று லொறி உரிமையாளர்கள் கோரி இருந்தனர். எனினும் அக்கோரிக்கை அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை இதனை அடுத்து லொறி உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-6-164)

## கைதடி...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 16 ஆம் திகதி காலை 7-30 மணியிலிருந்து இவர் காணாமற்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்வேலியில் கடந்த 11 ஆம் திகதி காணாமற்போன 5 மாணவர்களுடன் சேர்த்து கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 6 பேர் காணாமற்போயிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ 5 ரி)

## 2 புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் இரு புளொட் உறுப்பினர்கள் கிருலப்பனையில் உள்ள ஒரு வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலீஸார் தெரிவித்துள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

னதும் அலுவலகங்களையும் நேற்றுமாலை சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தனர்;

இரு தரப்பினரும் ஆயுதங்கள் சகிதம் நடமாடுவதால் எந்நேரமும் மோதல் வெடிக்கலாம் என பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

அச்ச நிலைமைகாரணமாக நேற்று பாடசாலைகளில் மாணவரின் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது. தனியார் கல்வி நிலையங்களும் இயங்கவில்லை.

நேற்றுக் காலை வர்த்தக நிலையங்களை மூடுமாறு ஒரு தரப்பும், அவற்றைத் திறக்குமாறு மறுதரப்பும் மாறி மாறி உத்தரவிட்டதால் வர்த்தகர்கள் மத்தியிலும் பீதி ஏற்பட்டிருந்தது.

இதேவேளை—

பம்பலப்பிட்டியில் கொலையுண்டவர்களில் ரெலோ ஆதரவாளரான வர்த்தகர் எம். ஜெயக்கொடியின் உடல் வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு நேற்று தச்சன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

[ஐ 6-21-164]

# நியூஸிலாந்து வெற்றி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நியூஸிலாந்து—பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 7 4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது

அடுத்து ஆடிய நியூஸிலாந்து அணி 33 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (உ-6)

## மின்மாற்றி...

[முதலாம் பக்கத் தொடர்]

மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது

இந்தக் குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய படையினர் 50 தமிழர்களைக் கைது செய்தனர்.

இவர்களில் 11 பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

## கப்பலுக்குக்......

[முதலாம் பக்கத் தொடர்]

'லங்கா முடித்த' கப்பலில் மன்னாரில் இருந்து அழைத்து வரப்பட்ட அகதிகளே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்று திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்,

தற்போது உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள 924 அகதிகளும், இன்று மன்னாரில் இருந்து திருகோணமலைக்கு அழைத்து வரப்படவுள்ள 300 பேருமாக சுமார் ஆயிரத்து 200 பேர் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதனை அடுத்தே தனிப்பட்ட பயணிகள் ஆத்திரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது;

கடந்த ஒன்றரை மாதங்களாக திருகோணமலையில் தங்கியுள்ள தமக்கு உடனடியாக கப்பல் வசதி செய்து தருமாறு அவர்கள் கோரி உள்ளனர். (ஐ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org